Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிளு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுளு ஐப்பசிமீ அஉ வெள்ளிக்கிழமை (25 October. 1963) [இலஂ-ஙo

# சக்தி வழிபாட்டின் சக்தியை விளக்கும்

## அபிராமியந்தாதி

சைவசமய மக்களால் அநுட்டிக்கப்பட்டு வரும் பிரதான விரதங்களுள் நவராத்திரி விரதமும் ஒன்ருகும் இவ்விரதம் புரட்டாசி மாதத்துச் சுக்கிலபட்சத்துப் பிரதமை முதல் நவமியீருக ஒன்பது இரவுகளிலும் பார்வதி தேவியாரை வழிபடும் விரதமே நவராத்திரியாகும். இவ்வொன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று நாட்கள் இலக்குமிதேவியையும், கடைசியான மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியையும் வழிபட்டு, வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றினையும் பெற்று வாழ்வர்.

இக்காலங்களில் சக்தி தோத்திரங்களையே பெரும்பாலும் பாராயணஞ் செய்வர். அங்ஙனம் பாராயணம் செய்யும் சத்தி தோத்திரங்களில் அபிராமியந்தாதியும் ஒரு சிறந்த நூலாகும். இந்நூலை அபிராமிப்பட்டர் பாடியுள்ளார். அந்நூலைப்பற்றிச் சிறிது சிந்திப்பாம்.

அபிராமிப்பட்டர் தேவி அருளினுலே திருக்கடவூரில் அவதரித்தவர். தமிழ் - சமஸ்கிருதம் என்னும் இருமொழிகளிலும் வல்லுனராய் விளங்கினுர். திருக்கடவூர்ச் சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அபிராமி யம்மையாரிடத்துப் பக்தியுடையராய் அம்மையை நியமமாகச் சென்று வழிபட்டு ஆன்மார்த்தமாகவும் பூசித்து வந்தார்.

அவர் அபிராமிதேவியின் மேல் வைத்த மெய்யன்பை உண்மையாக அறியாமல், அத்தேவியை ஆன்மார்த்தமாக வழிபட்டு வருதலை அறிந்த ஸ்மார்த்த வேதியர் சிலர் இவர் பரிவார தேவதா சக்திபூசை செய்து வருகின்ருர், எனத் திரித்துணர்ந்து அவர்மீது பகை பாராட்டினர். ஒருநாள் தையமாவாசையிலே காவேரி சங்கம ஸ்நானஞ் செய்து திருக்கடவூரில் வந்து தங்கிய சரபோஜி மகாராசாவைக்கண்டு, அபிராமிப்பட்டர்மீது தமக்கிருக்கும் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அரசன் உடனே அவரை அழைத்து, இன்று புச்ச அமாவாசை எத்தனை நாழிகை வரையில் இருக்கின்றது என்று வினவ, தேவி உபாசனையில் அமிழ்ந்தியிருந்த அபிராமிப்பட்டர், இன்று பௌர்ணமித் திதியல்லவா என்று தவறுதலாக விடை கூறினுர். இதனைக் கேள்வியுற்ற அரசன் இவர் மீது வேதியர் கூறிய குறை உண்மையென்று எண்ணி, கோபக்குறிப்போடு போய் வாரும் என்று அபிராமிப்பட்டரை அனுப்பிவிட்டான்.

அபிராமிப்பட்டர் தனது உறைவிடமடைந்து தான் பிழையாகச் சொல்லியதை நினைந்து வருந்தினுர் உடனே அபிராமியம்மையிடம் சென்று தேவியே! அரசனுக்கு நான் பிழையாகக் கூறிவிட்டேன். இதனின்றும் தப்புவதற்குத் தேவியே அருள வேண்டும் என்றும் வேண்டினுர்.

அபிராமிப்பட்டர் தேவி சந்நிதியில் இரும்புக் கம்பிகளால் விட்டம் பூட்டி அவற்றில் நூறு கயிறுகளை மாட்டித் தொங்க விட்டு உறியாகப் பின்னி அவ்வுறியின் மேல் இருந்துகொண்டு, அபிராமிதேவி தமக்குக் காட்சி கொடா விட்டால் அக்கினியில் வீழ்ந்து பிராணத்தியாகம் செய்வேன் என்று உறுதி பூண்டு, அத்தேவி தயக்கு எதிரே காட்சி தரவேண்டும் என்ற கருத்தை எண்ணிப் பின் வரும் பாடலை முதலாகப் பாடுகின்ருர்.

சைவப் புலவர்
திரு. வ. கந்தசாமி

உதிக்கின்ற செங்கதி ருச்சித்
திலக முணர்வுடையோர்,
மதிக்கின்ற மாணிக்க மாதுளம்
போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி
மென்கடிக் குங்கும தோய
மென்ன
விதிக்கின்ற மேனியபிராமி
யென்றன் விழுத்துணையே!

இவ்வாறு ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் ஒவ்வொரு கயிறு அரிந்துகொண்டு வந்தார். 79 ஆவது பாட்டிலே தேவி பிரசன்னமாகிப் பட்டருக்கு அருள் புரிந்தாள். நீர் பாடிய அந்தாதியை மிகவும் விருப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்ருேம். இவ்வந்தாதியை மெய்யன்போடு பாராயணஞ் செய்வோர் எனது அருளைப் பெறுவார்கள் என அபிராமியம்மை கூறினுர். அபிராமிப் பட்டருக்கு ஏற்பட்ட இன்னலையும் ஒழிக்கத் தேவி அருள் சுரந்தாள்.

(தேவி காட்சி கொடுத்த
79-ஆவது செய்யுள்)

விழிக்கே யருளுண் டபிராம
வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்
டெமக்கவ் வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்க
ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம்
மோடென்ன கூட்டினியே.



## நற் சிந்தனை

கறுத்திருண்ட கண்டத்தின்
பெருமை தோன்றும்
கதிகாட்டுங் கண்ணிணைகள்
கலந்து தோன்றும்
செறுத்தவர்தம் புரமட்ட
சிரிப்புத் தோன்றும்
தேவர்கணம் சூழ்ந்திருக்கும்
சிறப்புத் தோன்றும்
ஒறுத்தவர்த மென்பெல்லா
முடம்பில் தோன்றும்
ஒளிதோன்றும் ஓங்கார
வாசி தோன்றும்
சிறுத்தவிடை யுமையாளோர்
பாகந் தோன்றும்
சிவசிவா சிவன்சிவ
னெனக்கண் டேனே.

பின் அபிராமிப்பட்டர் எஞ்சிய கயிறுகளை அரியாது 100 பாடல்களையும் பாடி முடித்தார்.

அன்றைய தினம் சூரியாஸ்தமயன காலத்திலே தேவி ஆகாயததில் வீசிய திருத்தோடானது அநேக சந்திரர் ஒருங்கு திரண்டதுபோலக் காட்சியளித்தது. இதனைக் கண்ட வேதியர் ஆச்சரியமடைந்து அபிராமியம்மையார் தமது அடியவரின் வாக்கைக் காப்பாற்றவே இவ்வித அற்புதத்தைப் புரிந்தார் என்று அபிராமிப்பட்டரின் பக்தித் திறனைப் பாராட்டினர். அபிராமிப் பட்டர் என்ற நாமத்தையும் சூட்டினர்.

தேவியின் கடைக்கண்களினின்றும் திருவருள் சுரக்கின்றது என்பதனைப் பின்வரும் பாட்டில் அழகாகக் கூறுகின்ருர்.

தனந்தருங் கல்வி தருமொரு
நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந்
தரு நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந்
தரு மன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி
ராமி கடைக்கண்களே!

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயேயென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்று நில்லே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத தொண்டனுர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்ருேம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினுன் சிவபெருமான்.

## மகா முருகவேள் தலைமையில்
## கந்தரோடை - சன்மார்க்க தவகூடம்
## ஐப்பசிப் பூரணை விழா

இந்த நோன்பின் விபரம் முன்னமே இந்துசாதனமூலம் வெளியானது. ஆகவே நோன்பென்பது விசேட கவனத்துக்குரியதாகும். அதன் பலாபலனும் முக்கிய அம்சமாக உலகில் மிளிரும். நோன்பு செய்வோரும் நோன்புரை செய்வோரும் அன்பிலும் கருணையிலும் மிகுந்த தகுதியுடையவர்.

இத்தகுதிகளை இருவினைக்கீடாகவுள்ள எந்த மனிதனும் அறியமுடியாது; அதன் பலனைத் தரவும் முடியாது. இந்த விதியில் எல்லாரிலும் மேலான மகா முருகவேள் தலைவராதல் மிகப் பொருத்தம். அவர் முறையீட்டு நோன்பைப் பரிசிலனை செய்து என்றும் குறையாத வருளை வாரிபோல வழங்கல் மிக வினிது.

இம்முறைகள் பொலிய முறையே, சத்தியப்பிரமாணம், பிரணவ நோன்பு, ஆன்மநோய் காயத்திரி ஜெபம். பசளை வேண்டுமா வேண்டாவா? தற்போதம் மாறுமா? என்று, தலம் பொல்லேன், "இப்போது இங்கு அவனுதவான்", திலகவதியாரின் நோன்பு, அப்பர் அருள் விருந்து, சேக்கிழாரும் பெருந்தகையரசும், அருளாளரும் அருச்சுனன்தபசும், சிவசாம்பிராச்சியம், சைவம் என்று உண்டு? என்று இல்லை? நால்வர்கண்ட தெய்வச்சபை, சின்னங்கள் கேட்டால், ஔவையாரும் சமயமும் சங்கமும், வள்ளல்யார்? எழுத்தின் மேதைச்செல்வம், தொண்டின்பரிசு விருந்தாகி மருந்தாகும், அப்பர் திருக்கயிலாய யாத்திரை, திருமுறை இன்னிசை, 1000 ரூபா பரிசு விளக்கம் முதலிய உரைகள் அமைதியாக, இறைவன் திருப்பாதத்தில் ஒப்படைத்துரைக்கப்பெறும்; தகுதியன்பர்களாலென்ப. அவர்கள் பெயர்கள் பின்னர் நோன்புரைச் செய்திகளோடு வெளியாகும், உரைகள் தொடர்ந்து மூன்று நாட்கள் நிகழும்.

வித்துவக் கலைஞன்
ஆ. சி. சாந்தகுரு,

கந்தரோடை,
22-10-63.

தேவி தோத்திரம்

## அமர்வாய் மனத்தில்

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : ஹிந்தோளம் :: தாளம் : ஆதி

பல்லவி

நாரா யணி ஞானச ரோஜினி
நாகபூ ஷணி மீன லோசனி (நா)

அநுபல்லவி

நாராயணன் மனம் நயந்தச கோதரி
நமக்கருள் புரியும் நடன தயாபரி (நா)

சரணம்

அஞ்சிய தேவருக் காகஅவ் விடமே
அருந்திய பரனுடன் ஆடுவாய் நடமே
அஞ்சலி செய்திடு மன்பரி னிடமே
அமர்வாய் மனத்தில் அருள்வாய் திடமே. (நா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஹூ ஐப்பசி மீ
அ உ வெள்ளிக்கிழமை

## வேலை இல்லாதோருக்கு விமோசனமில்லையா?

இந்நாட்டின் சீர் கேட்டில் மிகவும் கவலையைக் கொடுப்பது, ஓரளவுக்குக் கல்வி பயின்றும் ஒருவித வேலையும் இல்லாது வீதிகள் தோறும் வீண்காலம் கழிக்கின்றவர்களின்நிலைமையே இதைப்பற்றி அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியற்றலைவர்களும் அடிக்கடி பேசிக்கொள்கின்றனர். ஆவேசமாகக் கூச்சல் செய்தபடி இருக்கின்றனர். ஆனல் நடைபெறுவதொன்றுமில்லை!

வேலைக்கு வேண்டிய வசதிகளை உண்டுபண்ணுவது ஆட்சியாளரின் கடமை எல்லாம் இலங்கை மயமாக்க வேண்டுமென்று சொல்லிப் புறநாட்டுப் பொருள்களை இங்கு இறக்குமதி செய்யத் தடைசெய்யும் அரசினர் அப்பொருள்களை இங்கு உற்பத்திஆக்க வேண்டியஉதவியை அளிக்கக்கூடாதா?

பயனற்றுவெறும் வெளியாய் இருக்கின்ற நிலம் யாழ்ப்பாணக்குடாநாட்டில் அதிகமாக இருக்கின்றது. இயந்திர உதவிகொண்டும் மின்சார வசதியுடன் இந்நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்து நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்தி இளைஞர்களுக்கு வேலைசெய்யும் நல்ல ஊக்கத்தையும் அதனல் உழைப்பையும் கொடுக்கலாம். இந்த வகையிலே அரசாங்கமோ அல்லது சமூக சேவை நலங்கருதும் சங்கங்களோ அரசியற்கட்சிகளோ இயங்குவதைக் காணேம்.

கல்வியை அரைகுறையாகக்கற்று அதனற் பயனுருது பொழுதை அவமே கழிக்கும் நிலைமை மிகவும் தீங்கானது. தொடர்ந்து மேற்கல்வியைக் கற்பதற்கும் வசதியில்லை, புறநாடுகளுக்குச் சென்று கல்வி பயில அரசினர் தடைகள் பல உள. இவ்வாருனல் எவ்வாறு நிலைமை சீராக முடியும்? அடிக்கடி கல்வித் தராதரப் பத்திரச் சோதனைக்குரிய விதிகள் மாற்றப்படுகின்றன. இம்மாற்றம் கல்வியின் அடிப்படையான கொள்கையையே பாதிக்கின்றது.

வேலையில்லாமையால் வறுமை ஒருபக்கம், வரிகள் சுமக்கமுடியாத நிலைமையால் வறுமை இன்னெருபக்கம், பொருட்களின் விலை கட்டுக்கடங்காமல் மேலோங்குவதால் வறுமை வேறெருபக்கம் என்ருல் நாட்டு மக்கள் எவ்வாறுய்யலாம். மனக்கவலையும் வறுமையுமே நாட்டின் வளமென்ருற் பின் யாது விளையுமோ நாமறியோம். பேச்சுப்பேசிக் காலத்தைக் கழிக்காது ஒருசிறிதாவது ஆக்கவேலையில அரசினர் ஈடுபட்டு வேலையில்லா விபரீதத்தைப் போக்கப் பொதுத்தேர்தல் [illegible]க்கும் இப்பொழுதாவது முன்வரமாட்டார்களா?

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்க வேன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகோ லோசக மேழுமளித்
தண்டா னுறங்க வொழித்தான் பித்தாக வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கன தனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகலகலா வல்லியே! 2.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்த் துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ வுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகலகலா வல்லியே.

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகலகலா வல்லியே! 4.

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்றாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத் தலராத தென்னே நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகலகலாவல்லியே!

## சிறுவர் பள்ளிகள் தெய்வ ஆலயங்களே

"குழந்தைகள் — தெய்வங்கள்; அவர்கள் சிறு வயதில் பழகும் பழக்கமே எதிர்கால உலகில் ஒளி வீசும்; நெஞ்சிலே ஒன்றும் வாக்கிலே ஒன்றும் வைத்துக்கொள்ளத் தெரியாத பிஞ்சு உள்ளங்களை— தெய்வங்கள் என்றும்— அத்தகைய உள்ளங்கள் கூடிப் பழகிக் கல்வி பெறும் நிலையத்தைக் கோயிலென்றும் கூறுவதில் என்ன பிழையிருக்கிறது?

இவ்வாறு சென்ற 20-10-63 ஞாயிறு மாலை, நாயன்மார்கட்டு பாலர் பராமரிப்புக் கழகம் நடாத்தும பாலர் பாடசாலையின் புதிய கட்டிடத்தினைக்குத்துவிளக் கேற்றித் திறந்து வைத்துப் பேசும்போது கோப்பாய்க் கிராமச் சங்க உறுப்பினரும் அறப்பணியாளருமாய திரு. இ. சரவணமுத்து அவர்கள்குறிப்பிட்டார்கள்.

இவ்விழா மாலை 6½ மணியளவில் பாலர் பராமரிப்புக் கழக மண்டபத்தில் கழகத் தலைவர் ஆசிரியர் திரு. ச. சதாசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து திரு. இ. சரவணமுத்து அவர்கள் பேசும்போது 'வித்தியாதானமே தானமெல்லாவற்றிலும் தலைசிறந்ததென்றும், இக்கிராமத்திலுள்ள தரும சிந்தையாளர்கள் இந்நிலையத்தின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதுடன், இக்கழகத்தால் அளிக்கப்படவிருக்கும் சைவசமயக்கல்வி மிகவும் சிறந்ததென்றும் குறிப்பிட்டார்கள்.

பாலர்கழகக் காரியதரிசி தமது வரவேற்புரையில் ஷை கழகத்தின் ஆரமப வரலாறு, இன்றைய நிலை, எதிர்காலத் தேவைகள் என்பவற்றை விளக்கி இத்தொண்டு வளர ஊக்கிவிடும பெருமக்கள் அனைவரையும் மன மகிழ்ச்சியுடன் வாழ்த்துவதாகக் குறிப்பிட்டார்

அவரையும்சபையோரையும் வரவேற்கும் வரவேற்புப் பாவொன்றும் வாசிக்கப்பட்டது.

பால்மணக்கும் வாயிற்
பாலகரின் தாமரைக்கை
கால்மணக்கும் என்று
தாய்முகர்ந்து—நூல்மணந்து
[illegible]
[illegible]
போவென்று சொல்க புகழ்ந்து!

### சக்தி வழிபாட்டின்...

1-ம் பககத் தொடர்ச்சி

இவ்வாறு சிறந்த கருத்துக்கள் நிறைந்த அபிராமியந்தாதிக்கு இயற்றமிழ் போதக ஆசிரியர் உயர்திரு ம. க. வேற்பிள்ளையவர்கள் சிறந்த உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். அவ்வுரை சைவ உலகிற்கு ஒரு வரப்பிரசாதமேயாகும்.

எனவே இத்தகைய பக்தி நிறைந்த நூல்களைப் படிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும். பாடசாலைகளிலும் — ஆலயங்களிலும் நவராத்திரிகாலங்களில் அபிராமியந்தாதி பாராயணம் செய்ய வேண்டியது அவசியமாகும். அருள் நிறைந்த நூல்களைப் படிப்பதினலேயே அருளைப் பெற முடியும் இந் நூலை அச்சிட்டு இலவசமாக வழங்க வேண்டும். இந்நூலின் சிறப்புக்களை எடுத்து உபந்நியாசம் செய்யவேண்டும்.

முப்மூர்த்திகளாலும் வழிபட்டு வரும் பராசக்தியின் அருளநிறைந்த அபிராமியந்தாதியைப் படித்துப் பயனடைவோமாக.

## யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச புத்தகசாலை திறப்புவிழா

அன்புடையீர்,

நாவலர் பெருமானல் பிரசுரித்தும் பதிப்பித்தும் வெளியிடப்பெற்ற நூல்களைத் தமிழ் சைவ அபிமானிகளுக்கும் மாணவர்களுக்கும் இலகுவில் மலிவாகப் பெற்றுக்கொள்ளச் செய்கின்ற மூல இலக்ஷியத்தோடு புத்தக விற்பனையை மேற்கொண்டு யாழ். சைவப் பிரகாசப் பதிப்பகத்தில் காங்கேசன் துறைவீதியிலுள்ள 450-ம் இலக்கப் புத்தகசாலை மீண்டும் திறக்கப்படுகிறது.

அத் திறப்புவிழா 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ந் திகதி விஜயதசமி நன்னாளாகிய சோபகிருது ஐப்பசி ஞாயிற்று வாரம் பகல் 2-15 மணி தொடக்கம் 2-45 மணிவரையும் உள்ள சுபவேளையில் ஆரம்பித்து நடைபெறும்.

இல. 450
காங்கேசன் துறைவீதி,
வண்ணார்பண்ணை, 20-10-63.

இங்ஙனம்,
மு. மயில்வாகனம்,
நிர்வாகஸ்தர்.

## சம்ஸ்கிருத விஸ்வ பரிசத் புத்தூர்க்கேந்திரம்

சென்ற (13-10-63 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சம்ஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் புத்தூர்க் கேந்திரத்தினுல் ஒரு கூட்டம் வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடாத்தப் பெற்றது. வியாகரண சிரோமணி தி.கி. சீதாராமசாஸ்திரிகளின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மு வைத்தியலிங்கம் 'ஆரிய திராவிட இனப்பாகுபாடு' என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினுர். பல நூலாசிரியர்களின் மேற்கோள்களை எடுத்துக்காட்டிய அன்னுர் அவையினரின் சிந்தனையைத் தூண்டினுர்.

சென்னை, அமர பாரதி பரீக்ஷாஸமிதியின் தேர்வுகளிலும், பம்பாய் - பாரதீய வித்யாபவன் நடாத்திய தேர்வுகளிலும் சித்திபெற்ருேர்க்குப் பத்திரங்களும் சிறப்பான சித்தியடைந்தோருக்குப் பரிசில்களும் தலைவரால் வழங்கப்பெற்றன.

சென்னை அமரபாரதீ பரீக்ஷ ஸமதிக்கு இலங்கையில் ஒரு கிளை தொடங்கப்பட்டது. அதன் நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: வியாகரண சிரோமணி தி கி சீதாராமசாஸ்திரிகள், உபதலைவர்கள்: நியாயசிரோமணி க. சுப்பிரமணியன், க. வை. ஆத்மநாத சர்மா, காரியதரிசி: பண்டிதர் ச. ப. சர்மா, உபகாரியதரிசி: திரு. ஷண்முக குமரேசன், தனதிகாரி: திரு. இ பாலசுப்பிரமணியம், நிர்வாக சபையோர்: கு பாலசுந்தரக் குருக்கள், பூ தியாகராஜ ஐயர், திரு. கு. குருசாமி, திரு. ஆர். எஸ். கந்தசாமி; திரு வே, நடராசா, திரு. மு. வைத்தியலிங்கம், திரு. அ. சபாரத்தினம், திரு. இ. திருநாவுக்கரசு.

சம்ஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் புத்தூர்க்கேந்திரத்துக்கும் புதிய நிர்வாகிகள் தெரியப்பட்டார்கள்.

நியாயசிரோமணி க. சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினுர். பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா நன்றியுரை கூறினுர்.

### ஊர்வலமும் தமிழ் விழாவும்

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், ஈழத்துப் பண்டிதர் கழகம், ஏழாலை வடக்கு, கிழக்கு கிராம முன்னேற்றச்சங்கம் என்பவற்றின் ஆதரவுடன் இலக்கிய இரசிகர் சங்கச்சார்பில் ஏழாலை சைவ மகாசனவித்தியாசாலை மண்டபத்தில நாளை சனிக்கிழமை காலை தமிழ்விழா நடைபெற இருக்கிறது.

கருத்தரங்கில் திருவாளர்கள் இ. மகாதேவா, சி சரவணப்பவன், ச. ஸ்ரீநிவாசன், க. தி. சம்பந்தன், பண்டிதர் வ. நடராஜன் ஆகியோர் பங்குபற்றுவர். கவி இன்பம் என்பதுபற்றி திரு. க. ச. அருணந்தி சொற்பொழிவாற்றுவார்.

'என்றுமுளதென்றமிழ்' என்ற தலைப்பில் இலங்கை வானெலி நாவற்குழியூர் நடராஜன் தலைமையில் நிகழும் கவியரங்கில் பல ஈழத்துக்கவிஞர்கள் பங்குபற்றுகிருர்கள்

பிற்பகல் நிகழ்ச்சியில் வித்துவான் க. வேந்தனர், பண்டிதர் செ. துரைசிங்கம, கலாநிதி ஆ. சதாசிவம், திரு. நாவேந்தன், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதர் பொனனுத்துரை ஆகியோர கலந்துகொளவார்கள்.

ஊர்வலம் காலை 6-30மணிக்கு அரசினர் மகாவித்தியாலய முன்றலிருந்து ஆரம்பமாகும்.

### ஐக்கிய நாடுகள் தினவிழா

யாழ் - மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் ஐக்கிய நாடுகள் தின விழா 26-10-63 சனிக்கிழமை மாலை 5 மணிமுதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கனடாத்தூதுவர், மாட்சிமை தங்கிய ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அன்று பி ப. 5-00 க்கு ஐ. நா. தாபனக் கொடியேற்றுதலும் திரு. எஸ். சி. மாணிக்க வாசகர் அவர்கள் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்), பி. ப. 5—05 சமூகஜோதி, இராசவாசல் முதலியார் சி. தியாகராசா அவர்கள், வரவேற்புரையும் மேலும் பலர் சொற்பொழிவும் நிகழும்.

### இவ்வாரம் உங்கள்

(3- ம் பக்கத்தொடர்ச்சி)

நல்லவாரம் செலவுகள்பெருகும். மீனாசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

அலுவலகத்தில் சச்சரவுக்கு இடமுண்டு. தந்தையாரின் உடல் நிலை பாதிக்கப்படும். புதிய முயற்சிகள் வெற்றிபெறும். ஆரம்ப வெற்றிகளினுல் ஏமாந்துவிட வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ அறிஞர்கள் பங்குபற்றும் சற்பிரசங்கம்

இணுவில் கந்தசுவாமிகோவிலில் நவராத்திரி விழா வைபவத்தை முன்னிட்டு ஐப்பசி மீ 1ம் திகதி முதல் 10ம் திகதி முடிய விசேட அபிஷேகம் கூட்டுப்பிரார்த்தனை வைபவங்களும் பல அறிஞர்களது சற்பிரசங்கங்களும் சங்கீதக் கச்சேரிகளும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஸ்ரீ லலிதா சகஸ்திரநாம மந்திரங்களையும் அவற்றின் பொருளையும் தமிழில் செய்யுள் ரூபத்தில் மொழிபெயர்த்தாக்கப்பெற்ற நூல் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. த. முத்துசுவாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் அரங்கேற்றம் செய்யப்பெறவிருக்கிறது. அதனை ஆக்கியவர் நாவலர் பாடசாலைச் சிரேட்ட ஆசிரியர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள். அவ்விழா நேற்று நிகழ்ந்தது.

பூர்த்தி விழாவாகிய இறுதி ஞாயிற்றுக்கிழமை மாலை திரு. இ. இராசரத்தினம் அவர்களது சங்கீதக்கச்சேரி இடம்பெறவிருக்கிறது.

அன்று வித்துவான் பொன் முத்துக்குமாரன் அவர்கள் 'சைவமாண்பு' என்ற பொருள்பற்றிச்சொற்பொழிவாற்றுவார்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை திரு. மு. வைத்தியலிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் கா. நமசிவாயம், சித்தாந்த பண்டிதர் இ. செல்வத்துரை திருமதி. து. குகனேஸ்வரி B.A. பிரம்மஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள் ஆகியோரின் விரிவுரைகள் நிகழ்ந்துவருகின்றன.

இவ்விழாக்களை நடாத்துவதில் தலைவர் வை. கதிர்காமநாதன் அவர்களும், பண்டித வித்துவான் இ. திருநாவுக்கரசு அவர்களும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

கூட்டுப்பிரார்த்தனை வைபவங்களும், மாணவர் சொற்பொழிவுகளும் தினந்தோறும் இடம்பெற்று வருகின்றன. இம்முயற்சி மாணவர்க்குக் கலை ஆர்வம் தூண்டச் செய்யும் பெருவிருந்தாகும்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே
கோண்டாவில்

1. ஜெபரட்ணம் சார்ல்ஸ் ஜோசேப்புவும்
2. பெண் அலிஸ் இரத்தினம்மாவும்

—வழக்காளிகள்.

இல. M.B. 4883

எதிராக

நீர்வேலி வடக்கு
பொன்னுத்துரை பாலரத்தினம்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B. 4883—ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் காணியை 1963-ம் ஆ நவம்பர் மீ 28உ வியாழக்கிழமை (28-11-63) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2700, மேலும் ரூபா 2000-க்கு 15-6-62 தொடக்கம் 22-11-62 வரை 10 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 22-11-62 தொடக்கம் இறுபடும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 223-85.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று நீர்வேலி இறை சொத்திக்கராயன் வளவும் அரியான்குடியிருப்பும் அரியான் வளவும் ஆயிலடியும். பர, கில. இலா. 16 5/8 பதினறரையே யரைக்காலும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சின்னத்துரை பெண் அன்னப்பிள்ளையினுதனம். வடக்கு நமசிவாயம் தேவராசாவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். மேற்கு பஞ்சாட்சரம் பெண் சரஸ்வதியினுதனம். தெற்கு தம்பாபிள்ளை பெண் பாறுபதிப்பிள்ளையினுதனமும் ஒழுங்கையும் இதடங்கலும். கிழக்கெல்லைக்காணியின் கிழக்கெல்லைக் காணிக்குளிருக்கும் கிணற்றிற்றண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும்,

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
22-10-63.

M 176 25-10-63

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

இல. M B 4894

சங்கானை கிழக்கு நன்னித்தம்பி தில்லையம்பலம்
வழக்காளி

எதிராக

பெரியவிழான்

1 வஸ்தியாம்பிள்ளை அருளானந்தம் செல்லர்
2 மனைவி மேரி மல்பிரேட் நவமணி —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 4894-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக்காணியும் 1963-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23-ந் திகதி சனிக்கிழமை (23-11-63) பிற்பகல் 2 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 6245 க்கும் 22-6-62 தொடக்கம் 19-3-63 வரையும் ரூபா 5000 க்கும் 9 வீத வட்டியும் அதன்பின் கூடிய முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும். கோட்டுச் செலவு ரூபா 292-10 சதம். அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 206-90 சதம், வெளியாத்தச் செலவு ரூபா 53-60 சதம், வரும் செலவு ரூபா 31-60.

ஆதன டாப்புகள்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டைத்தெருப்பு கோயிற்பற்று பெரியவிழான் இறை "சந்திர தாழ்வு" என்னும் காணி நெற். பர. 20 உம், கில பர 8½ யும் எல்லாமாக 28½ நெ. பரப்பும், கில பரப்பும் அல்லது நெ. பர. 32 3/8 அதாவது இதில் நெ. பரப்பு 25 தவிர்த்து ஆகவே மிகுதி நெ. பர 7 3/8 இதற்கு எல்லை கிழக்கு கீழே கூறப்படும் இரண்டாவது காணியும் வடக்கு நீக்கிலாப்பிள்ளை சிலேஸ்தீனுபிள்ளையும். அக்காமாரும். மேற்கு மகளின் சீதனக் காணி தெற்கு வேலாயுதர். கைம்பெண் செல்லமும் பங்காளரும்.

(2) மேற்படி கூறிய கோயிற்பற்று இறை "சந்திர தாழ்வு" என்னும் காணி நெ. பர 9. இதில் பனைமரமும், வடக்குப் பகுதியில் கிணறும் உண்டு. எல்லை கிழக்கு பெரியதம்பி சரவணமுத்துவும் பங்காளரும் வடக்கு முருகர் கைம்பெண் சேதுப்பிள்ளையும் பங்காளரும். மேற்கு நீக்கிலாப்பிள்ளை சிலேஸ்தீனுபிள்ளையும், அண்ணர் அக்காமாரும், மேலே கூறிய முதலாவது காணிக்காரரும், தெற்கு சரவணை மனைவி சின்னம்மாவும், தம்பிப்பிள்ளை மனைவிசிதம்பரமும்மற்றவர்களும்

---

### சக்தி வழிபாடு

சக்தி வழிபாட்டின் மேன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது நவராத்திரி விழாவாகும், சைவ மக்கள் யாவரும் இவ்விழாவைச் சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வாறு வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நவராத்திரி விழா ஆரம்ப தினத்தன்று சொற்பொழிவாற்றிய ஆசிரியர் திரு. சி. சிவரத்தினம் குறிப்பிட்டார்

இவ்விழா தலைமையாசிரியர் பண்டிதர் இ திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. ஆசிரியை திருமதி. ம சண்முகரத்தினமும் அங்கு பேசினர் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்திற்குப் பாடசாலை மாணவர் சென்று விருத்தப்பா படித்து வழிபாடு செய்தனர்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. Testy 344

விசுவனுதர் பொன்னுத்துரை
கைம்பெண் முத்தம்மா
அச்சுவேலி
உரிமைத் தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 344 ஆம் இலக்கம் கொண்ட உரிமைத் தத்தவ வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி நில அளவைக்காரன் N. தம்புவால் 1963-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ம் திகதி தயாரிக்கப்பட்ட 1480-ம் இலக்கம்கொண்ட படத்தில் காட்டிய A - B என்ற துண்டுகளையும் பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட 12 அடி அகலம் கொண்ட பரப்பு ஒன்று ½ குளி ஒழுங்கையையும் நீக்கி மற்ற ஒன்பது துண்டுகளையும் அதைச் சேர்ந்தவைகளையும் 1963-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 2-ம்திகதி சனிக்கிழமை(2-11-63) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தத்துண்டுகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ஆதன டாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு அச்சுவேலி கோவில்பற்று அச்சுவேலி இறை "அம்புலம் குடல் கலட்டி" பரப்பு நிலலாச்சம் 38 குளி 8-ம் கிணறுகளும் வான் பயிர் செய்பயிர்களும். இக்காணிக்கு எல்லை கிழக்கு அச்சுவேலி தொண்டைமானறுரோட்டு வடக்கு ஒழுங்கை, மேற்கு சின்னவன் பாலனினதும் வேலன் முதலியினதும் மறு பெயர்களுடையவும் ஆதனம். தெற்கு யோசெப் சீனிவாசகத்தினதும் V. C. தாமோதரத்தினதும் ஆதனம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1-ம் | துண், | ப.கி.லா. | 5 | குளி | 17 | |
| 2-ம் | ,, | ,, | 5 | ,, | 7 | |
| 3-ம் | ,, | ,, | 5 | ,, | 7 | |
| 4-ம் | ,, | ,, | 5 | | —- | |
| 5-ம் | ,, | ,, | 4 | .. | 11 | |
| 6-ம் | ,, | ,, | 4 | ,, | 11 | |
| 7-ம் | ,, | ,, | 0 | ,, | 17½ | |
| 8-ம் | ,, | ,, | 2 | ,, | 13½ | |
| 9-ம் | ,, | ,, | 2 | ,, | 13½ | |
| 10-ம் | ,, | ,, | 1 | ,, | 00½ | |

க. செல்வத்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 23-10-63.

M 179 25-10-63

---

(3) மேலே கூறிய கோயிற்பற்று இறை "அந்தி தாழவு" என்னும் காணி நெ. பர. 17. இதில் தெற்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் உண்டு. எல்லை கிழக்கு சரவணமுத்து பெரியதம்பியும் மற்றவர்களும். வடக்கு பங்காளர் வஸ்தியாம்பிள்ளை மனைவி பிலுப்பதி மேற்கு பங்காளர் அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து தெற்கு மேற் கூறிய இண்டாவது எதிரியின் ஆதனமும் ஆகும். இதில் பிரிக்கப்படாத 7/8 பங்கு.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நெ. 25, [illegible]
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

M 169 25-10-63,

---

இவ்வாரம் 27-10-63 — 2-11-63

## உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நண்பருடன் தவறுன விவகத்திற்கு இடமுண்டு. குடும்பத் தகராறுகளுக்கு இடமுண்டு. சகபாடிகள் மேலிடத்தார்களோடு எச்சரிக்கையாக நடந்துகொள்க. செலவுகள் பெருகும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இரகசிய எதிரிகளால் தொல்லைக்கிடமுண்டு. ஆனல் ஊமை வெல்ல முடியாது. குடும்ப நிலைமை திருப்தியாயிருக்காது. பணமளவில் நல்ல வாரம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

உடல்நிலை திருப்தியாயிருக்காது. நண்பர்கள் மிக உதவுவர் போட்டியாளரை வெல்வதுடன் நிலபுலங்களால் இலாபமடைவதும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

ஞாயிறு மாலை திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். வார மிகுதிப்பகுதி பண, தொழில் ஈடுபாடுகளுக்கு எற்றது. உடல்நிலை பிரச்சினைக்குரியது வயிற்றுக்கோளாறுகளுக்கு இடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

கல்வி விவகாரங்களில் வெற்றி நிச்சயம். தம்பி தங்கைகள் மிக உதவுவர். தடைகளைத்தாண்டிவிட உம்மால் முடியும். செவ்வாய் இரவு புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். இனத்தவர்மூலமான தொல்லைக்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். இனத்தவருடன் மோதலுக்கிடமுண்டு. நிலபுலங்களால் இலாபம் உண்டாம், கண்ணேய்களுக்கு இடமுண்டாம். வியாழன் மாலை வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்,

எண்ணியபடி நடந்துகொள்வது கடினம். உணர்ச்சி வசப்படுதல் காரணமான சச்சரவுகளுக்கு இடமுண்டு. சண்டைகளைக் கட்டிக்கொள்வதில் முந்தி நிற்பீர். தந்தையாரின் உடல்நிலை ஊறுபடும்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

இலகுவில் பொறுமை இழப்பீர் சுகவீனமும் எற்படும் பணமளவில் நல்ல வாரம். விவசாய ஈடுபாட்டில் வெற்றி நிச்சயம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இனத்தவருடன் மோதலுக்கிடமுண்டு. வேலை வழமையில் மாற்றமும் சுகவீனமுமுண்டாம். நண்பர்களும் மூத்த உடன்பிறவிகளும் மிக உதவுவர்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

நிம்மதியீனம், நண்பருடன் மோதல் உண்டாம். அலுவல்களில் ஆரம்பத்தில் தோல் விவரினும் வெற்றிநிச்சயம். நிலபுலங்களால் இலாபம் உண்டாம்

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

வயிற்றில் கோளாறுகளுக்கு இடமுண்டு. நிலபுலங்களால் இலாபம் உண்டாம். பணமளவில்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுப்பிட்டி இமையாணன் குறிச்சி செல்லையா சிதம்பரப்பிள்ளை —வழக்காளி

இல. M B 5347

எதிராக

மல்லாகம் தற்போது சுன்னாகம்
1. சதாசிவக்குருக்கள் நடேசுசர்மா
2. பெண் இராசலட்சுமி அம்ம
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 5347 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னல்விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1963ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 23ம்திகதி(23 11-6 ) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4715 ம் இதில் ரூபா 3000 க்கு 24-1-63 திகதி தொடக்கம் 3-6-63 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீதவட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 237-00 சதம.

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று மல்லாகமிறை "சல்லியவுடை தெற்கு" நிலப்பரப்பு 9-ம் குளி 11-ம், இதில் நிலப்பரப்பு இரண்டு (2-ம்) குளி 11-ம். வீடும் கிணற்றுப்பங்கும். எல்லை கிழக்கு தெ, ச. துரையப்பாவின் உருமைக்காறருக்குரிய ஆதனம், வடக்கு பிள்ளையார் கோவில் ஊர்வல வீதி, மேற்கு முத்தையாக் குருக்கள் பெண் ஞானம்பாளுக்கும் செல்லையா சிதம்பரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும். முற்பதிவு H 305/123.

2. மேற்படி மல்லாகமிறை "சல்லியவுடை" நிலப்பரப்பு இரண்டு (2-ம்) எல்லை கிழக்கு செல்லையா சிதம்பரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியஆதனம், வடக்கும் மேற்கும் முத்தையாக்குருக்கள் பெண் ஞானம்பாளின் ஆதனம், தெற்கு ஒழுங்கை. இதில் சொரியலாய் அரைவாசி (1/2) முற்பதிவு H 286/70'

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer
தெல்லிப்பழை, 28-9-1963,

M 177 25-10-63,

---

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக் கோட்டில்

காலஞ்சென்ற கெருடாவில் கதிர்காமர் முத்துக்குமாருவின் ஆதனத்துக்கு

இல 718 T

கெருடாவில் முத்துக்குமாரு கைம்பெண் வள்ளிநாச்சன்
தத்துவகாரி

மேற்கூறிய இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படி இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1963-ம் ஆ கார்த்திகை மீ 11 ந் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சி பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கெருடாவிற் குறிச்சியிறை தீத்தான் செம்பாடு நில. பர 42 1/4 இதில் நடுப்பெற 1/3 பங்குக்கு நில. பர. 13 குளி 9 1/2 ஆனல் ஆட்சிப்படி நில. பர. 33 குளி 1/2. இதில் நில. பர. 4 குளி 11 3/8 எல்லை கிழக்கு இளையதம்பி சிவகுருவுக்குடைய ஆதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு கொடுக்கற்காரன் தெற்கு குளப்புண்ணியம் காணி இது முழுவதிலும் கிழக்குப் புறமாகவிருக்கும் கிணற்றிலும் வழிவாய்க்காலிலும் அரைவாசியும்.

ஆ சபாரத்தினம்,
வெந்திஸ்மேஸ்தர்.
வடலிப்பாதி, தும்பளை,
பருத்தித்துறை, 25-10-63,

M 180, 25-10-63,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டு 7326-ம் இலக்க வழக்கில் 1963-ம் ஆ ஐப்பசி மீ 3-ந் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1963-ம் ஆண்டு கார்த்திகை மீ 25-ந் உ திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணி வரையில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

வல்லுவெட்டி
1 ஆறுமுகம் கந்தையா
2 கந்தையா பாலசிங்கம்
வழக்காளிகள்

எதிராக

உடுப்பிட்டி
1 மயில்வாகனம் இராசையா
2 பெண் நவரத்தினம்
3 நல்லதம்பி கிட்டிணசாமி
எதிராளிகள்

அறவிடவேண்டிய தொகையின் விபரம்

சித்தாரித்த தொகை ரூபா 6009-53 தீர்வை வரையில் வட்டி ரூபா 224-37 தீர்வைத் திகதி தொடக்கம் 30-9-63 வரைக்கும் 5 வித வட்டி ரூபா 324-67. கோட்டுச் செலவு ரூபா 334-79 மொத்தம் ரூபா 6893-36.

ஆதனம்

வல்லுவெட்டித்துறை இறை முக்கரவத்தை வயலும் மறுபிரிவுகளும் நில பர 153 குளி 12 1/32 இது பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 1507-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் 1942-ம் ஆ ஐப்பசி மாதம் 13-ம் திகதியைக் கொண்ட 6670-ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது. இதில் 1-ம், 2-ம் துண்டுகளுக்கு நில பர 57 குளி 14, எல்லை கிழக்கு பொதுவாக விடப்பட்ட 9-ம் துண்டாகிய ஒழுங்கை, வடக்கு ஒழுங்கை மேற்கு ரோட்டு, தெற்கு E. முத்துவேலு விசுவலிங்கத்துக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், பலா அடங்கலிற் சொரியலாய் அரைவாசியில் 1/3பங்கும். அதாவது 1/6 பங்கும் A, B, C என்று அடையாளமிட்ட கிணறுகளில் பங்கும், ஆனல் மறுபேருக்குரிய கிணறுகளில் பங்குப் வழிவாய்க்காலுரித்தும் புறநீக்கலாக.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலிகிழக்கு, 20-10-1963.
M 169 25-10-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் ரோட்டு 57-ம் இலக்கத்திலுள்ள G, S. இம்மானுவல்
—வழக்காளி.

இல. M.B. 4428

எதிராக

யாழ்ப்பாணம்
3-ம் குறுக்குத்தெருவிலுள்ள
1. யோசேப்பு மரியாப்பிள்ளையும் பெண்
2, எலிசபேத்தும்
யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள
3. செல்லர் ஞானப்பிரகாசப்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4428-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1963-ம் ஆண்டு கார்த்திகைமீ 9உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 4650-ம். 4 - 12 - 61 தொடக்கம் 31-5-62 வரைக்கும் ரூபாய் 2500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கொமிஷன் செலவு ரூபாய் 9-ம். இதில் ரூபா 1000 குறைய.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெரு இறை "ஒளிசுட்டான்" என்னும் 2 பிரிவு தென்னந்தோட்டம். முதலாவது நெற் பர. இலா. 199¾. இரண்டாவது நெற் பர. இலா. 96. இரண்டு பிரிவுகளும் கூடிய நெற்பரப்பும் நிலப்பரப்பும் இலா, 295¾. ஆனல் இப்போது கண்டுள்ளபடி நெற், பர. இலா, 262குளி 7½, தென்னை

## கோட்டு விற்பனவு விளம்பரம்

புன்னலைக்கட்டுவன்
1. அம்பலவாணர் வேலுப்பிள்ளை
2. மகள் அன்னம்மா
—வழக்காளிகள்.

இல. M.B. 4170

எதிராக

சிறுப்பிட்டி
1. அருணசலம் செல்லத்துரை கைம்பெண் சின்னம்மா
2, காலம் சென்ற அருணசலம் செல்வராசா
3. வேலுப்பிள்ளை கைம்பெண் சோதிப்பிள்ளை
4. செல்வராசா கைம்பெண் தங்கம்மா 2-ம் எதிராளியின் கோட்டால் நியமிக்கப்பட்ட பதில் எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4170-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 1-ம், 2-ம் துண்டுக்காணிகளை 1963ஆம் மார்கழிமீ 7உ சனிக்கிழமை முற்பகல் 9½ & 10½ மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதல்ரூபா 3000/- இதில் ரூபா 3000-க்கு 13 - 2 - 1957 திகதி தொடக்கம் 6-12-61 திகதி வரைக்கும் 6 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 458 20 சதம். இதில் ரூபா 500 கொடுபட்டது.

காணி விபரம்:

1. புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை உப்பா வயல் நெற்பரப்பு 36¾. எல்லை கிழக்கு கனகர் பெண் முத்துப்பிள்ளைக்குரிய ஆதனம்: வடக்கு கந்தர் சின்னத்தம்பிக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு கனகர் பெண் முத்துப்பிள்ளைக்கும் மற்றுவர்களுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு கனகர் முத்துப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும் விற்கப்படும் முற்பகல் 9½ மணிக்கு.

2, புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை மாதியந்தனை நிலப்பரப்பு 9, இலுப்பைகளும். எல்லை கிழக்கு கயிலாயர் பெண் முத்துப்பிள்ளைக்குரிய ஆதனமும் ஒழுங்கையும். வடக்கு ஒழுங்கை. மேற்கு இராமர் மூத்ததம்பியின் உரித்தாளிகளுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும் முற்பகல் 10½ மணியளவில் விற்கப்படும்,

ந. ஆறுமுகம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி
20 - 10 - 1963.
M. 170 25-10-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

திருநெல்வேலி தெற்கு
1. நாகலிங்கம் கனகரத்தினம்
2. பெண் கமலா
—வழக்காளிகள்.

எதிராக

புற்றை ரோட்டு
கொக்குவில் கிழக்கு
1. சரவணமுத்து கனகரத்தினம்
2, பெண் விஷயலட்சுமி
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5178-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963ஆம் கார்த்திகைமீ 30உ சனிக்கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் ரூபா

## யாழ்ப்பாணம் — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிகி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
இல. M.B. 3597
உரும்பிராய் வடக்கு
கந்தையா சின்னத்தம்பி
— வழக்காளி,

எதிராக

கோப்பாய் தெற்கு
சுவாமிநாதன் சுப்பிரமணியம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3597 ஆம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 1963-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23-ந் திகதி சனிக்கிழமை (23-11-63) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூபா 10666 - 64 சதத்துக்கு 1-9-60 தொடக்கம் 29 - 11 - 60 வரைக்கும் ரூபா 8000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் கூடியமுழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கொடுக்கும் வரையும் இறக்க வேண்டும் கோட்டுச் செலவு ரூபா 317-90 சதம், அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 219-70 சதம், வெலியாதது செலவு ரூபா 59-03 சதம் வரும் செலவு ரூபா 39-17 சதம். இதில் ரூபா 5500 கழிவு.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோப்பாய் கோயிற்பற்று கோப்பாய் தெற்கு இறை "அடிச்சிராய்" என்னும் காணி நில பர. 4. ஆனல் உரிமை ஆட்சி நில. பர. 6. இதில் கிணறும் பழையதும் புதியதுமான கட்டிடங்களும், அடக்கலையும், மடசல

கூடமும் வேறு பல கட்டிடங்களும் உண்டு, எல்லை கிழக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பிரதான வீதியும். வடக்கு கனகரெட்டினம் மனைவி வள்ளி அம்மினியும், சுவாமிநாதர் சுப்பிரமணியததின் ஆதனமும், மேற்கு பழைய வீதியும், தெற்கு ஒழுங்கையும் உண்டு.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
நம்-35 கொழும்புத்துறைவீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M. 168 25-10-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 2690.
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
சிறுப்பிட்டி வடக்கு
செல்லையா பொன்னையா
—வழக்காளி.

எதிராக

புத்தூர் மேற்கு
1, சின்னத்தம்பி காசிப்பிள்ளை
2. ஷை வயித்தி கைம்பெண் வேலாசி —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 2690-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளை 1963-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ம் திகதி (5-12-63) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3239/57 இன்னும் ரூபா 2500-க்கு 6-2-59 தொடக்கம் 2 - 6 - 59 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியுங் கோட்டுச் செலவு ரூபா 284/- சதம் 33 இதில் ரூபா 900 கொடுபட்டது.

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோயிற்பற்று, புத்தூர் தெற்கிறை "அன்கன்தாளை" பர. நில. இலா. 4½. இதில் மேற்குப் பக்கமாக பர நில. இலா. 2¼ லும் வான்பயிர், செய்பயிர்களும். எல்லை கிழக்கு சுப்பன் கதிர வேலுவினுதனம், வடக்கு தம்பிப் பிள்ளையினுதனம். மேற்கு கந்தவனம் சின்னம்மாவினுதனம, தெற்கு வேலுப்பிள்ளை சரவணையினுதனம், அத்துடன் தெற்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதடங்கலும்.

1980/- இதில் ரூபா 8000-க்கு 25-10-1962 திகதி தொடக்கம 12-3-1963 திகதிவரைக்கும் 9வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 289 சதம் 60.

காணி விபரம்:

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை பெரியசிமா நிலப்பரப்பு 3½ கல்வீடும் பின் பெரிய சிமா நிலப்பரப்பு 1½. எல்லாமாக நிலப்பரப்பு 5 கல்வீடும் கிணற்றில் பங்கும் செய்பயிர்களும், எல்லை கிழக்கு செல்லத்துரை பெண் புவனேஸ்வரிக்குரிய ஆதனம். வடக்கு கந்தையா பாலசுப்பிரமணியத்துக்குரிய ஆதனம். மேற்கு ரோட்டு, தெற்கு ஒழுங்கை, இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி
22-10-1963.
M 172 25-10-63,

களும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு ஆறுமுகம் சதாசிவத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு கையொழுங்கையும் தியாகர் இராமசாமிக்கும் கார்த்திகேசு நாகலிங்கத்துக்குமுரிய ஆதனங்கள். மேற்கு கார்த்திகேசு நாகலிங்கத்தினுதனம். தெற்கு கடற்கரை.

அ வெற்றிவேலு,
கொமிஷனர்.
19. வேம்படி வீதி.
யாழ்ப்பாணம், 22-10-63,
M 175 26-10-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக கோட்டில்

உரும்பிராய் வடக்கு
நாகலிங்கம் இராசையா
-வழக்காளி

எதிராக

இல M B 4845
பத்தமேனி ஆறுமுகம் ஜயாத்துரை -எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4845 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும்மூன்று துண்டுக்காணிகள் என்னல் 1963ம் ஆண்டு காரத்திகை மாதம் 25 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3630-ம்ரூபா2000க்கு 25-5-62 தொடக்கம் 18-2-63 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 254/85 சதம்.

காணிகளின் விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று பத்தைமேனியிறை "ஆலம்கொட்டையடி அல்லது செகவீரன் சிமா அல்லது கப்மாலையடி" குளி எட்டு (குளி 8) கல்வீடும் செய்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் பத்மநாதன் பெண் கமலாம்பிகைக்குரியவாதனம். மேற்கு வேலு ஆறுமுகத்திற்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், தெற்கு ரோட்டு. இதடங்கலும். இதன் பதிவுK 164/187,

(2) ஷையிறை "வண்ணன் சிமா" பர நீ இல நாலு (பர நீ இல 4) செய்பயிர் வான்பயிர்களும் எல்லைகிழக்கு காலஞ்சென்ற கணபதியார் சின்னப்புவின் உரித்தாளர்கட்கும் பங்காளர்கட்குமுரியவாதனம். வடக்கு காளிப்பிள்ளை முருகேசுவிற்கும் பங்காளர்கட்குமுரியவாதனம். மேற்கு சுப்பிரமணியம் பெண் இரத்தினம்மாவிற்குரியவாதனம்.தெற்கு காலஞ் சென்ற சரவணமுத்து தாமோதரம்பிள்ளையின் உரிமைக்காரர்கட்கும்பங்காளர்கட்குமுரியவாதனம். இதிற் சொரியலாய் 7/16 பாகமும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும்கிணற்றில் தண்ணீர்ப்பாகமும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும். இதன் பதிவு K 184/54.

(3) ஷையிறை ஆலங்கொட்டையடி பர நி இல, பன்னிரண்டரை (பர நி இல 12 1/2) கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு எதிராளிக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு காலஞ்சென்ற சரவணமுத்து தாமோதரம்பிள்ளையின் உரிமைக்காரருக்குரியவாதனம், தெற்கு ரோட்டு, இதிற் சொரியலாய் 1/3 பாகம், இதன் பதிவு K 184/251.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963ம் ஆண்டு ஐப்பசி மீ 16 உ
காரைநகர்,
M. 174 25-10-63.

2. ஷை புத்தூர் வடக்கிறை "அன்கன்தாளை" பர.நில.இலா.3, வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு முருகர் அப்புக்குட்டியினுதனம். வடக்கு வேலுப்பிள்ளை சரவணையினுதனம், மேற்கு செல்லத்துரை பெண் சின்னம்மாவினுதனம். தெற்கு ரோட்டு, இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

தா. செல்லையா,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
இல: 37.
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
12-10-63.
M. 171 25-10-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 25-10-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org